செ.வெ.எண். 66 நாள்.05.02.2018.

திருநெல்வேலி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தமிழக அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (05.02.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னாள் படை வீரர் நலத்துறையின் மூலம் படைப்பணியின் போது இறந்த படைவீரர் Hav.S. பிரபாகரன் அவர்களது மனைவி திருமதி.சி.பெனிடிக்டா முத்துமணி என்பவருக்கு இராணுவ மைய நல நிதியிலிருந்து ரூ.1,70,000/–த்திற்கான காசோலையினையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், சிவகிரி வட்டத்தைச் சார்ந்த இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/– உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.எஸ். சங்கரலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் திரு.என்.முருகன், துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி.லெட்சுமி பிரியா உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.